# கல்வி அமைச்சு - தேசிய மொழிகள் மற்றும் சமூக விஞ்ஞான கிளை

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை-2024

## முன்னோடிப் பரீட்சை

**புவியியல் II**

**மூன்று மணித்தியாலம்**

**22 T II**

**மேலதிக வாசிப்பு நேரம்-10 நிமிடங்கள்**

**அறிவுறுத்தல்**

✵ ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களையேனும் தெரிவு செய்து மொத்தமாக **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.


### பகுதி II பௌதீக புவியியல்

01. i. எரிமலை செயற்பாட்டின் அமைவிடத்தினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படும் **இரு** வகையான நிலவுருவங்களை பெயரிடுக. (02 புள்ளிகள்)


ii. மேலே உம்மால் பெயரிடப்பட்ட இரு நிலவுருவ வகைக்கும் பொருத்தமான **நான்கு** நிலவுருவங்கள் உருவாகக்கூடிய விதத்தினை வரைபடத்தின் துணையுடன் விளக்குக (06புள்ளிகள்)

iii. பனிக்கட்டியாற்றுடன் தொடர்புடைய நிலவுருவங்கள் கீழே A.B எழுத்துக்களினால் காட்டப்பட்டுள்ளது.

A



B



a. மேலே A,B இனால் காட்டப்பட்டுள்ள நிலவுருவங்கள் உருவாவதற்கு காரணமான **இரு** பனிக்கட்டியாற்று செயற்பாடுகளை குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

b. மேலே தரப்பட்டுள்ள நிலவுருவங்களை முறையே பெயரிட்டு, அவை உருவாகும் விதத்தினை சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

iv. பனிக்கட்டியாற்றுடன் தொடர்புடைய நிலவுருவங்களை பொருளாதார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தும் **மூன்று** சந்தர்ப்பங்களை உதாரணங்களின் துணையுடன் விளக்குக.(06 புள்ளிகள்)

02. i. சரிவின் தன்மைக்கேற்ப நிலச்சரிவு வகை **இரண்டினை** பெயரிடுக. (02 புள்ளிகள்)

ii. நிலச்சரிவு ஏற்படுவதில் தாக்கம் செலுத்தும் பௌதீக மற்றும் மானிட காரணிகளுக்கிடையே காணப்படக்கூடிய தொடர்புகள் **மூன்றினை** விளக்குக (06 புள்ளிகள்)


iii. நிலச்சரிவு அனர்த்தமொன்றினை முகாமை செய்வதற்காக அனர்த்த முகாமைத்துவ வட்டத்தின் **மூன்று** தொழிற்பாடுகளை கலந்துரையாடுக. (06 புள்ளிகள்)

iv. இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள அனர்த்த முகாமைத்துவ உபாயங்களை மேலும் திறனுடையதாக மாற்ற மேற்கொள்ளக்கூடிய **இரு** ஆலோசனைகளை விளக்குக. (06 புள்ளிகள்)

03. i. காலநிலை மூலகங்கள் என்றால் என்ன? (02 புள்ளிகள்)

ii காலநிலை மூலகங்கள் **மூன்றினது** செயற்பாடுகளில் வெப்பநிலை ஏற்படுத்தும் தாக்கத்தினை சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

iii. a. மேலே தரப்பட்டுள்ள வரைபடத்தில் **A, B**, எழுத்துக்களினால் காட்டப்பட்டுள்ள காலநிலை வலயங்களை பெயரிடுக (02 புள்ளிகள்)




b. இலங்கையின் காலநிலையை தீர்மானிக்கும் பூகோள காரணி **ஒன்றினையும்**, பிராந்திய காரணி **ஒன்றினையும்** விளக்குக (04 புள்ளிகள்)

iv. உலக காலநிலை மாற்றமானது, இலங்கையின் பல்வேறு துறைகளிலும் ஏற்படுத்தும் தாக்கத்தினை **மூன்று** உதாரணங்களின் ஊடாக தெளிவுபடுத்துக. (06 புள்ளிகள)

04. i. இடைவெப்ப வலய காட்டு உயிர்ப்பெருந்திணிவுகள் பரம்பிக் காணப்படக்கூடிய **இரு** கிழக்காசிய நாடுகளை பெயரிடுக. (02 புள்ளிகள்)

ii. உலகில் மத்திய தரைக் காட்டு உயிர்ப்பெருந்திணிவுகளில் அவதானிக்கக்கூடிய **மூன்று** விசேட பண்புகளை விளக்குக. (06 புள்ளிகள்)

iii. பாலைவன மற்றும் துந்திரா உயிர்ப்பெருந்திணிவுகளில் காலநிலையானது தாக்கம் செலுத்தும் விதத்தினை **மூன்று** பண்புகளினூடாக ஒப்பிட்டு விளக்குக. (06 புள்ளிகள்)

iv. பாலைவன மற்றும் மத்திய தரை உயிர்ப்பெருந்திணிவுகள் சார்ந்த பிரதேசங்களில் அண்மைகாலமாக இடம்பெற்று வரும் மனித செயற்பாடுகளில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் **மூன்றினை** சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

## பகுதி II மானிட புவியியல்

05. i. **"அகதிகள்" மற்றும் , " இடம்பெயர்ந்தோர்"** பதங்களை விளக்குக. (02 புள்ளிகள்)

ii. மேற்கு ஐரோப்பா மற்றும் கிழக்காசிய நாடுகள் உலகின் பிரதான சனத்தொகை அடர்த்தி கூடிய பிரதேசங்களாக மாறுவதற்கு பங்களித்த **இரு** காரணிகளை விளக்குக. (06 புள்ளிகள்)

iii. இலங்கையினுள் இடம்பெறும் உள்நாட்டு இடப்பெயர்வுகள் பிரதேச அபிவிருத்திக்கு துணை புரியும் விதத்தினை **மூன்று** உதாரணங்களினூடாக விளக்குக. (06 புள்ளிகள்)

iv. அண்மைக்காலமாக அபிவிருத்தியடைந்த நாடுகள் குடிவரவினை கட்டுப்படுத்துவதற்கான காரணங்கள் **மூன்றினை** விவரிக்குக. (06 புள்ளிகள்)

06. . i. **"பூகோளமயமாதல்"**என்பதனை சுருக்கமாக விளக்குக. (02 புள்ளிகள்)

ii. பூகோளமயமாதலின் பண்புகள் **மூன்றினை** விளக்குக. (06 புள்ளிகள்)

iii. பூகோளமயமாதலில் பல்தேசிய கம்பனிகளின் பங்களிப்பினை **மூன்று** காரணிகளினுடாக விளக்குக (06 புள்ளிகள்)


iv. இலங்கையின் கல்வித்துறையில் பூகோளமயமாதலின் **இரு** சாதக மற்றும் பாதக விளைவுகளை விபரிக்குக. (06 புள்ளிகள்)

07. i. குடியிருப்பொன்றுக்கு இருக்கவேண்டிய அடிப்படை அம்சங்களுள் **நான்கினை** பெயரிடுக. (02 புள்ளிகள்)

ii. a. செயற்பாடுகள் மற்றும் இயல்புகளின் அடிப்படையில் குடியிருப்புகளின் **இரு** வகைகளை குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

b. அவற்றுள் **ஒன்றினது** பண்புகளை விளக்குக. (04 புள்ளிகள்)


iii. a. உலக நகர சனத்தொகையின் காலரீதியான மாற்றங்கள் பின்வரும் வரைபின் மூலம் (கறுப்பு நிறத்தில்) காட்டப்பட்டுள்ளதோடு, அதனை அடிப்படையாகக் கொண்டு **இரு** போக்குகளை குறிப்பிடுக. (02 புள்ளிகள்)




b. உலக நகராக்கத்தின் அண்மைகால போக்குகள் இரண்டினை கலந்துரையாடுக.(04 புள்ளிகள்)

iv. இலங்கையின் நகராக்கம் சார்ந்த பிரச்சினைகளை தீர்ப்பதற்காக இலங்கை அரசினால் மேற்கொள்ளப்பட்டுள்ள மூன்று நடவடிக்கைகளை விபரிக்குக. (06 புள்ளிகள்)

08.




i. மேலே வரைபில் தரப்பட்டுள்ள **A,B,C,D** என்பவற்றை சரியாக பெயரிடுக (02 புள்ளிகள்)

ii. கைத்தொழில் அமைவிடத்தை தீர்மானிக்கும் மரபுரீதியான காரணிகளுக்கு பதிலாக தற்காலத்தில் முக்கியத்துவம் பெறுகின்ற **மூன்று** நவீன காரணிகளின்பொருத்தப்பாட்டினை உதாரணங்களினுடாக விளக்குக. (06 புள்ளிகள்)

iii. இலங்கையின் சுரங்க கைத்தொழிலானது நாட்டின் பொருளாதார விருத்திக்கு தாக்கம் செலுத்தும் விதத்தினை **மூன்று** காரணிகளினுடாக கலந்துரையாடுக. (06 புள்ளிகள்)

iv. இலங்கையில் தற்போது வீழ்ச்சியுற்றுள்ள கைத்தொழில் துறையினை கட்டியெழுப்புவதற்காக **மூன்று** ஆலோசனைகளை முன்வைத்து விளக்குக. (06 புள்ளிகள்)

❋❋❋❋